செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் : விரோதி ஞு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ஞு சித்திரை மீ கக உ வெள்ளிக்கிழமை (24-4-1970) [இலஙு

# அகில இலங்கைச் சைவ மாநாடு

## நாவலர் அநுபந்தம்

### பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

அ.

[ 'நாவலர்' என்ற தலையங்கத்தில் நாவலர் சரித்திர விமர்சனக் கட்டுரையொன்று 'இந்துசாதன'த்தில் தொடர்ந்து வெளி வந்தது. பின் புத்தக ரூபமாக்கப்பட்டது. அதில் இராம லிங்கர் மீது நாவலர் தொடுத்த வழக்குச் சம்பவம் சற்றே விரிவுற ஆராயப்பட்டது.

குறிப்பிட்ட சம்பவம் பற்றிய கற்பனைகள் வளர்ந்து கொண்டிருக் கின்றன. இராமலிங்கரின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படம் பிடிக்கத் திரைப்பட உலகம் கால்கோள் செய் கின்றது.

நிரூபிக்க இயலாத — நாவலரைத் தாழ்வுபடுத்துகின்ற — வெறுங் கற்பனைச் சம்பவம் யாதாயினும் படம் பிடிக்கப்படுமாயின், அது எத்தனையோ மனதைப் புண்படுத்துவதாயிருக்கும்.

அவ்வாறய தொரு நிகழ்ச்சி நேருமாயின் அது சட்டமூலம் தப்பாது காலந் தாழ்த்தாது தடைசெய்யப்பட வேண்டும்,

இங்ஙனமாதல் இன்றியமையாததோன்றதலை நீதி உலகுக்கும், சிறப்பாகச் சைவத் தாபனங்களுக்கும், மிகச் சிறப்பாக நாவலரபிமானிகளில் காரியத்தை நிறைவு செய்ய வல்ல செல்வாக்குள்ளவர்களுக்கும் எடுத்துக் காட்டும் முகமாக,

இந்த அநுபந்தம் வெளியிடப்படுகின்றது.]

i. a. தம் சீடர்கள் நாவலரை விரோதித்துத் தீக்ஷி தர்களைச் சார்ந்துசெய்த சூழ்ச்சியுட் சிக்குண்டு, பேரம்பலத்தில், 'நாவலர்' என்ற சொற்கு விபரீதார்த் தம் பண்ணிச் சொற்சோர்வுபட்டார் இராமலிங்கர் வழக்குத் தொடுத்தார் நாவலர்.

b. அரசியின் ஊடலைத் தணிக்கும் பொருட்டு அந்தப்புரஞ் சென்று கொண்டிருந்த பாண்டி யனை இடைமறித்து, அச்சந்தர்ப்பத்துக் கேற்றவாறு உபகரிக்கும முறையில், நம்பிக்கைக்குப் பாத்திர மான அரண்மனைப் பொற்கொல்லன், ஒன்று சொன் னனக; 'கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு' என்று ஆராயாதே சொற்சோர்வு பட்டான் பாண்டியன். கொல்லப்பட்டான் கோவலன். வழக்கெடுத்தாள் கண்ணகி.

ii. a. பேரம்பலத்திற் பேசியதைத் தாம் பேசவில் லையென்று நீதிமன்ற அம்பலத்தில் மறுத்து ரைத்து மீண்டுஞ் சொற்சோர்வு பட்டார் இராமலிங் கர்.

b. 'யானென்று மறியேன்' என்று மீண்டுஞ் சொற்சோர்வுபடாதே, தன் ஏமாற்றத்தை உணர்ந்து அதற்குப் பரிகாரந் தேடினன். பாண்டியன்

iii. a. ஆண்டுப் பேசியதும் பகிரங்கம். ஈண்டு மறுத் ததும் பகிரங்கம். அவ்வளவே அமையும் என்று வழக்கைக் கைவிட்டார் நாவலர்.

b. பாண்டியன் தன் ஏமாற்றத்துக்குப் பரிகாரந் தேடுவதைக் கண்டு வைத்தும் வழக்கைக் கை விட்டிலள் கண்ணகி.

iv. a. இராமலிங்கர் பேரம்பலத்தில் தாம் சொற் சோர்வுபட்டதை நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டு பச்சாத்தாபம் உறுவரேல், இருமுறை சொற்சோர்வுபட்ட வழியும் வழக்கை நிரூபியாதே

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர்
நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்
பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே.
திருச்சிற்றம்பலம்
— திருஞானசம்பந்த சுவாமிகள்.

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக் கும் வறியவர்களுக்கும் பங் கிட்டு, நீயும் உண்ணு.

உ

## முக்கிய அறிவித்தல்

முல்லைத்தீவு – வற்றுப்பளைக் கண்ணகை அம்மன் கோவில் பொங்கல் திருநாள்

மேற்படி பொங்கல் நிக ழும் சாதாரண வருடம் வைகாசி மீ 4-ஆம் திகதி (18-5-70) திங்கட் கிழமை நடைபெறும்.

முதலியார்
ஆ. மு. கனகசபாபதி J.P.U.M.
தலைவர்,
வற்றுப்பளை கண்ணகை
அம்மன் கோயில்,
பரிபாலன சபை
முல்லைத்தீவு,
18-4-70.
M 26 24, 31-4-70

பாலுக்கு நிகரான வெண்மையுடன் சலவை செய்கிறது




பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

## மகாவித்துவான். முதுபெரும்புலவர், திரு. சி. அருணைவடிவேலுமுதலியார் அவர்கள் கலந்துகொள்ளுவார்கள்

யாழ்ப்பாணம் சைவ பரிபா லன சபையார் இவ் வருடச் சைவ மகாநாட்டை மே. 11, 12, 13-ஆம் நாட்களில்நடத்து வதற்கு தீர்மானஞ் செய்துள் ளார்கள். தருமையாதீனக் கல் லூரித் தலைவர், மகாவித்து வான் முதுபெரும்புலவர் திரு. சி. அருணைவடிவேல் முதலி யார் அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள்.

தமிழ்நாடு திரு. அ. பாலற வாயன் M. A. அவர்களும், ஈழ நாட்டுச் சைவத் தமிழறிஞர்களும் விரிவுரையாற்றுவார்கள். சைவ மகாநாட்டு நிகழ்ச்சி நிரல் விரை வில் வெளியிடப்பெறும்.

உ

## திருநாவுக்கரசு நாயனர் குருபூசை

நாள்: சித்திரை மீ கஎ ம் உ (30-4-70) வியாழக்கிழமை
இடம்: யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்

மு. ப. 9 — பி. ப. 1 சிவபூஜா மண்டபத்தில் சிவபூசை, நாவ லர் மண்டபத்தில் கடவுளாராதனை, நாவலர் பூசை தமிழ்மறையோதல், மாகேசுர பூசை

இரவு விரிவுரைக் கூட்டம்

ஆரம்பம்: 6-30
தலைவர்: சைவப்புலவர்மணி த குமாரசுவாமிப்பிள்ளை
கடவுளாராதனை
தமிழ்மறையோதல்: தேவாரமணி திரு P. A. S. ராஜசேக ரன் அவர்கள் மாணவர்கள்
தலைவர் முன்னுரை
"அப்பர் கண்ட உண்மை"
—திரு S. A. பொன்னம்பலம் B. A. அவர்கள்
"திலகவதியாரும் திருநாவுக்கரசரும்"
—சைவப்புலவர் திரு வ கந்தசாமி அவர்கள்
'திருநாவுக்கரசரும் அப்பூதியடிகளும்"
— திரு. சி. கார்த்திகேசு அவர்கள்

சைவாபிமானிகள் சமூகமளிப்பார்களாக.

ஆ. தனபாலசிங்கம்
காரியதரிசி
மு. மயில்வாகனம்
சமயப் பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம். 24-4-70

### நல்லூர் — திருக்கேதீஸ்வரம்

## பஜனைப் பாதயாத்திரை

எதிரே வரும் 18-ம் திகதி (1-5-70) வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலி ருந்து பாதயாத்திரை ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி, செம்மணி வீதி வழியாக நாயன்மார்கட்டு, ஸ்ரீ இராசராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் பஜனைச்சபையாரால் உபசரிக்கப்பட்டும், பின்னர் கண்டி வீதி வழி நாவற்குளி வீதி வழியாக நாவற்குளி பாடசாலை யில் சிறிதுநேரம் தங்கி உபசரிக் கப்பட்ட பின்னர் மறவன்புலோ ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று அங்குள்ள அடியார்க ளால் உபசரிக்கப்பட்ட பின்னர் இரவு 11 மணிக்கு யாத்திரையை ஆரம்பித்து 2-5-70 காலை 9 மணிக்கு பூநகரி கரிக்கட்டைக் கந்தசுவாமி கோவிலில் இளைப் பாறி உபசரிக்கப்பட்டு மாலை 5மணிக்கு மீண்டும் யாத்திரையை ஆரம்பித்து இரவு 8 மணிக்கு செம்மண்குன்றுக்கு வந்து அங் குள்ள அடியார்களால் உபசரிக் கப்பட்டு 3-5-70 அதிகாலை 4 மணிக்கு ஜெயபுர் அடியார்களால் உபசரிக்கப்பட்டு மாலை 5மணி க்கு மீண்டும் யாத்திரை ஆரம்ப மாகி இரவு 8 மணியளவில் முளங்காவில் பிள்ளையார் கோவி

(வளர்ச்சி 6-ஆம் பக்கம்)

## சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரணஞூ சித்திரை மீ கக-உ வெள்ளிக்கிழமை [1970

## கடவுள் கொள்கை அருகுவதின் பலன்

நமது நாட்டிலுள்ள கோவில்களில் அடுத்தடுத்துக் களவுகள் நிகழ்ந்துவருகின்றன. கள்வர்கள் ஓட்டைப்பிரித்துக்கொண்டும, கதவுகளை உடைத்துக்கொண்டும், வேறும் வழிவகைகளைக் கையாண்டும் கோவில்களுக்குட் புகுந்து சேதம் விளைவிக்கின்றனர். சுவாமிகளின் திருவுருவங்களைப் பெயர்த்துக் கீழேயுள்ள இயந்திரத் தகட்டைக் கவருகின்றார்கள் கோவிலுண்டியல்களை உடைத்துப் பணத்தைக் களவாடுகின்றார்கள். கோவில்களின் பிற திரவியங்களையும் களவாடுகின்றார்கள்.

இவ்வாறு கள்வர்கள் கோவில்களுக்கு தீமைசெய்வதற்குக் காரணம் மக்களிடத்தில் கடவுள கொள்கை அருகிவருதலேயாம். ஒரு ஊரிலுள்ள திருக்கோவில் மனிதனுடைய உடலிலுள்ள இருதயம் போன்றது. இருதய இயக்கம் இல்லாமல் ஒரு மனிதன் உயிர்வாழ முடியாது. அதே போல் ஒருகோவிலின் அருட்சக்தியில்லாமல் அந்த ஊர் மக்கள சேமமாக வாழ முடியாது

"திருக்கோவிலில்லாத திருவிலூரும ......................
.... ... ... .... ... ... ... .... ... ... ..."

"கோவிலில்லாத ஊர் அடவிகாடே" என அப்பர் சுவாமிகளும் 'ஆலயந்தொழுவது சாலவும் நன்றென' ஔவைப்பிராட்டியார் பாடியிருக்கின்றமையும் சிந்திப்போமாக.

கோவில் வேதாகம முறைப்படி பரிபாலிக்கப்படாவிட்டால் ஊருக்குக் கேடுண்டாகும்.

"ஆற்றரு நோய்மிகும் அவனிமழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற்றனே" —திருமந்திரம்.

கடவுளிடத்தில் உண்மையான பக்தியுண்டானால் மக்கள் திருக்கோவில்களைச் செவ்வனே பரிபாலிப்பர். கோவில்களில் நடைபெறுகின்ற நித்திய நைமித்திகங்கள் சிறப்பாக நடைபெறுமைக்குக் காரணம் மக்களிடத்திலுள்ள பக்திக் குறைவேயாகும். மக்கள் தங்கள் ஊரிலுள்ள திருக்கோவில்களை வேதாகம முறைப்படி நிருவகித்தல் வேண்டும. தங்கள் இல்லங்களிலும பார்கக ஆண்டவன் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயம் மேன்மையுடைத்தென்பதை அவர்கள் உணருதல் வேண்டும். மக்களுடைய சேமத்தைப் பாதுகாககவே கோவில்கள் உள்ளன. ஆண்டவனுக்குக் கோவில்களினுல் ஒரு பிரயோசனமுமில்லை. மக்களுக்கே அவை பிரயோசனமுடையவை.

இந்தப் பேருண்மையை மக்கள் உணர்வார்களானுல் கோவில்களில் களவுகள் நிகழாது. மக்கள் இன்பமாக வாழ்வார்கள்.

## நிகழவிருக்கும் 1970 தேர்தல்

எதிர்வரும் பாராளுமன்ற உறுப்பினர் தேர்தலுக்கு அபேட்சகர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளுக்குரிய அரசாங்க அலுவலகங்களில் தங்கள் நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர். வடக்கில் 11 தொகுதிகளில் 45 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றார்கள் கீழ் மாகாணத்தில் 29 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றார்கள். சிங்களப் பிரதேசங்களில், ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதிகப்படியான அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன ஜனநாயக ஆட்சிமுறை இலங்கையில் எவ்வாறு இயங்குகின்றதென்பதை இத்தேர்தல் உலகுக்கு எடுத்துக் காட்டும். வாக்காளர்கள் தங்கள் வாக்குரிமை ஒரு விலையுயர்ந்த சொத்தென்பதை நன்கு உணருதல் வேண்டும், அவர்கள் நாட்டு நலனைக் கருதி காய்தல் உவத்தலின்றி தங்கள் வாக்குரிமையை தீர்க்கமாக ஆராய்ந்து தெளிந்து உபயோகித்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் தேசியஒற்றுமையையும் பொருளாதாரத்தையும் சமாதானத்தையும் பேணக்கூடிய ஒரு அரசாங்கம் நிறுவப்படுதல் சாத்தியமாகும்,

—0—

[ 1-ஆம் பக்கத்து வளர்ச்சி ]

## நாவலர் அநுபந்தம்

கைவிட்ட நாவலர் என்ன செய்திருப்பாரோ? சிந்திப்பார் சிந்திக்குக.

b. கண்ணகி எச்சந்தர்ப்பத்தில் என்ன செய்தாள்? நாவலர் எச்சந்தர்ப்பத்தில் என்ன செய்தார்? சந்தர்ப்பங்களை ஒப்பிட்டு நோக்குக.

v. a. கண்ணகி மன்னியாததன் பயன் யாது?

b. நாவலர் மன்னித்ததன் பயன் யாது?

vi. a. கண்ணகி தெய்வ நிலை உற்றதும், 'தென்னவன் தீதிலன்' என்கின்றாள்; தான் செய்த கொடுமைக்குப், 'பெயர்த்தும் பெயர்த்தும் பிறப்பல்' என்று உரைக்கின்றாள் மணிமேகலைக்கு.

b. இராமலிங்கர் வழக்கில் நின்று விடுபட்டதும என்ன செய்தார்? தாம சிக்குண்டதை உணர்ந்து, 'என் சீடர் மிகக் கொடியர்' என்று பாடித திட்டினர். சிற்றினத்தை விலகினர். உலகைப் பார்க்க நாணினர். ஊண் துறந்தார். ஏகாந்தத்தை நாடினர். அறை ஒன்றுட் புகுந்தார். அறை பூட்டப்பட்டது. அப்பாலான கற்பனைகளைக் கைவிடுவோம்.

vii. a. தெய்வக் கண்ணகியின் இருதய பீடத்தில, 'தென்னவன் தீதிலன்' என்று அவள் புகழும பாண்டியன் எவ்வாறு பூசிக்கப்படுவானே?

b. சிற்றினத்தை விலகி ஏகாந்த நிலை எய்திய இராமலிங்கரின் இருதய பீடத்தில் சிற்றினம இருக்குமா? இருமுறை சோர்வு பட்டும் வழககை விடுத்துத், 'தம் நெஞ்சு அறிவதை' அறிவுறுத்திய நாவலர் பெருமான் குடியிருப்பாரோ? சிந்தப்பார் சிந்திக்குக. வழக்குக்குப் பின் சீடரை நிந்தித்த நாவலரை நிந்தித்ததும் உண்டா?

v-ஆம் பிரிவில் வரும் வினுக்களுக்கு இனி விடைகைவருமே.

viii. a. கண்ணகி தெய்வநிலை யுற்றதும் பழிக்கஞ்சிய பாண்டியனின் நீதியை உணர்ந்தாள்.

b. பாண்டியனின் நீதியை உணராதே பிறவிக்கு வித்திட்ட மனிதக் கண்ணகியை இன்றைக்கும் கட்டியழும் சிலம்புச் செல்வங்களுக்கு, வழக்கில நாவலர் பெருமான் செய்த நீதி எங்ஙனம் விளங்கும்; இப்பிறப்பில் விளக்குமாறில்லை.

தக்கார்செயல்: "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

தன் சொற்சோர்வைத் தன்னெஞ்சறியும் அறியவைத்து, அவ்வளவில் அமைவதே தக்கார் செயல்.

தீர்ப்பு: அன்று பேரம்பலத்துக்கு இழுத்துப் பேசுவித்த சூழலையா? நீதிமன்றுக் கிழுத்துத் தம்மை உணரவைத்த நாவலரையா? ஏகாந்த முற்ற இராமலிங்கரின் இருதயம் போற்றும்

"காமஞ் செப்பாது கண்டது மொழிமோ"

(வளரும்)

## "குறிஞ்சிக் குமரன்"

"நிலம், மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சியென நால்வகைப்படும். நானிலமென்னும் பெயர் பூமிக்கு உண்டாயது அக்காரணம் பற்றியேயாகும். மருதநிலத்துக்குரிய கடவுள் இந்திரன், நெய்தலுக்கு உரிய கடவுள் வருணன், மருத நிலத்துக்குரிய கடவுள் மாயோன். குறிஞ்சிக்குரிய கடவுள் முருகனாகும். குறிஞ்சி மலையும் மலைசார்ந்த இடங்களும். ஆகவே குறிஞ்சிக்குமரன் குறிஞ்சிநிலததுக் குரிய முருகன் என விரியும்.

முருகு என்பதன் பொருள் இளமை அழகு நறுமணம் என்பனவாகும். முருகன் என்றும் இளையவன். ஆயிர கோடி மன்மதனுடைய அழகெல்லாம் திரண்டு உருவெடுத்தாலும் முருகனுடைய எழிலுக்கு இணையில்லை.

"ஆயிரகோடி காம ரழகெலாந்
திரண்டொன்றாக்
மேயினவெனினுஞ் செவ்வேள்
விமலமாஞ்
சரணந்தன்னிற்
றூயநல்லெழிலுக் காற்று
தென்றிடினிணைய
தொல்லேன்
மாயிருவடிவிற் கெல்லாமு
வமையார் வகுக்கவல்லார்"

நறுமணம் முருகனுடைய பண்புகளிலொன்றாகும் முருகப் பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் பேதமில்லை. சிவனே முருகன் முருகனே சிவன். சிவனைப்போல பஞ்சகிருத்தியமும்செய்கின்றவர். வேண்டினாக்கு இஷ்ட சித்திகளையும் வீட்டையும் உதவ வல்லவர்" என சைவப்புலவர்மணி திரு. த. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் 19-4-70 வியாழக்கிழமை யன்றிரவு வட்டு - மேற்கு அடைக்கலந்தோட்டம் கந்தசுவாமி கோயில் 8-ந் திருவிழா இரவு 'குறிஞ்சிக்குமரன்' என்னும் பொருள் பற்றிப் பேசும் பொழுது குறிப்பிட்டனர்.

சங்கீதபூஷணம வித்துவான் இ. நடராசா அவர்களும் சங்கீதபூஷணம் திரு. V.N. சண்முகரத்தினம் அவர்களும் பக்கவாததிய சகிதம் தமிழ்மறை யோதினர்.

யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகமும் ஷ்ரீ ஆலயக்கூட்டுச்சபையினரும திருமுறைப் பாராயணப் பஜனை செய்தார்கள்.

(நமது நிருபர்)

## எங்கள் அறிவித்தல்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு [மே. 1] சைவப்பிரகாச அச்சுயந்திரசாலைக்கும், இந்துசாதனக் காரியாலயத்துக்கும் 1-5-70 வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாகும். —அதிபர்

## ந. குருநாதன் சிரார்த்தநினம்

நல்லூர் ஸ்ரீமதி சடையம்மா மடததின் தலைவராயிருந்து சிவபதமடைந்த திரு ந குருநாதன் அவர்களுடைய சிரார்த்த தினம் 28-4-70 செவ்வாய்க்கிழமை முற்பகல் நல்லூர் அறுபத்துமூவர் குருபூசை மடத்தில் கொண்டாடப்படுமென ஷ்ரீ மடப் பூசகர் திரு. சி. தம்பிஐயா அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அணிந்துரை அரங்கம்

## லண்டன் முரசு

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ் வெளியீடு

வெளியீடுபவர்கள்:
லண்டன்முரசு பிரசுரச் சங்கம்

பேராசிரியர் அறிஞர், பரிஸ்டர் திரு. சுபாபதிப்பிள்ளை அவர்கள் உதவியுடன் 'லண்டன்முரசு' என்னும் சஞ்சிகை லண்டன் மாநகரிலிருந்து வெளிவருகின்றது. தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், தமிழ்நாட்டு முதல்மந்திரி திரு. மு. கருணநிதி, வித்துவான் கி. வா. ஜகந்நாதன் முதலியவர்கள் ஆசியுரை வழங்கியுள்ளார்கள். தமிழைப் பற்றி சிறுகட்டுரைகள் அடங்கியுள்ளன. மேற்கு நாட்டில் உள்ளவர்களிடத்தில் தமிழ்மொழிப் பற்று வளரவும், அவர்கள் தமிழின் பெருமையையும் வளனையும் அறிய இச் சஞ்சிகை பெருதும்உதவும். பிரான்சில் நடக்கப்போகின்ற மூன்றாவது தமிழாராய்ச்சி மகாநாட்டின் செய்திகளையும், தீர்மானங்களையும் உலக மக்களுக்குத் தெரிவிக்க இச்சஞ்சிகை இன்றியமையாததோன்றய் விளங்கும்.

## சமய அறிவுப் போட்டி

—0—

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் குருபூசைத் தினத்தை யொட்டி வழமைபோல சமயஅறிவுப் போட்டியொன்றினை நடத்தத் தீர்மானித்திருக்கின்றது வெற்றிபெறுவோருக்கு முதற் பரிசு ரூபா 15, இரண்டாம் பரிசு ரூபா 10, மூன்றாம் பரிசு ரூபா 5. புத்தகப் பரிசில்களும் நற்சான்றிதழ்களும் வழங்கப்படும்.

விபரங்களை அறிய விரும்புவோர்: கௌரவ பொதுக்காரியதரிசி, திருவருள் தவநெறி மன்றம், கோப்பாய் என்ற விலாசத்துக்கு 20 சதம் தபால் தலைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10251

கரணவாய் தெற்கு, 1. சபாபதி சின்னத்தம்பி 2. பெண் மாணிக்கம் —வழக்காளிகள்

எதிராக

இமையாணன் 1. கந்தர் இந்திரன் காலஞ்சென்ற 5-ம் எதிரியின் ஆதனத்துக்குப் பிரதிகாரியஸ்தர்
2. பெண் செங்கமலம்
3. சின்னன் நல்லதம்பி
4. பெண் நல்லம்மா

மரணம்:
5. வல்லி சின்னக்குட்டி —எதிராளிகள்

மேற்குறித்த இலக்கவழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைதத கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனம் 1970-ம்ஆண்டு வைகாசி மாதம் 12-ம் திகதி (12-5-70) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் குறித்த காணிகளியிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று இமையாணன் குறிச்சியிறை கழுகண்டன் தோட்டம் நிலப்பரப்பு 29 5/8 புளியன்குளம் பாதி நிலப்பரப்பு 14 7/8 புளியன் குளம் நிலப்பரப்பு 5 7/8 இப்பிரிவுகளில் முதலாம் பிரிவில் தெற்குப் புறமாக 16/9 பங்குக்கும் 2-ம் 3-ம் பிரிவுகளுக்கும் கூட்டிய நிலப்பரப்பு 37 குளி 7, 29/64 எல்லை கிழக்கு வீரவாகு பெண் ஆத்தைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு சின்னவன் வேலனுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு கந்தயா சங்கரப்பிள்ளையின் உரிமைக்காரருக்குடைய வாதனமும் வேறு ஆதனமும் இவ் எல்லைக்குட்பட்ட நிலம் பனைகள். வடலிடங்கலிற் சொரியலாய் 5/32 பங்கில் 2/3

| | |
|---|---|
| தாட்சித்தொகை ரூ. | 3657-20 |
| ரூபா 2000க்கு 1-11-68 தொடக்கம் 3-11-69வரை 10 வீத வட்டி ரூபா | 200-00 |
| ரூபா3857-20க்கு 3-11-69 தொடக்கம் 12-3-70வரை 5 வீத வட்டி | 63-44 |
| ரூபா | 3920-64 |
| செலவு ரூபா | 389-27 |
| மொத்தம் ரூபா | 4309-91 |

V. M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை
4-4-70 எம். 16 24-4-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை சிதம்பரப்பிள்ளை கணேசரட்ணமும் பெண் கௌரியம்மாவும், — வழக்காளிகள்

வழ. இல. M. B. 9757 எதிராக

வேலணை மேற்கு கணபதிப்பிள்ளை சிவஞானமும் பெண் சுவரட்ணம்மாவும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9757-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக காணியை 1970-ஆம் ஹூ சித்திரை மீ 25-ம் திகதி (25-4-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் முறையே அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 1287-50 சதமும் 21-2-68 தொடக்கம் 18-1-69 வரைக்கும் ரூபாய் 1000/- 15 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 272-02 சதமும்

ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோயிற்பற்று, வேலணை மேற்கு இறை ''மூத்தன்தனை'' பர. நெல். இலா 10 (பத்து) எல்லை கிழக்கு இராமநாதர் இளையதம்பியின் ஆதனம் வடக்கு கணபதிப்பிள்ளை சின்னையாவின் ஆதனம். மேற்கு இதன் மிகுதி ஆதனம் தெற்கு வேலுப்பிள்ளை துரையப்பாவுக்கும், M. கார்த்திகேசருக்கும், சகோதரத்துக்கும், செல்லையா மகள் இராசலட்சுமிக்கும் உரிய ஆதனம், பதிவு இல C 322/21

16, A அம்மன் றேட், அ. ஜெகநாதன்,
கந்தர்மடம், கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
யாழ்ப்பாணம், (எம் 24 18-4-70)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. V. பொன்னையா கைம்பெண் சின்னம்மா
2. பொன்னையா சிவானந்தன் இருவரும் கரும்பிராய்

இல: M B 9629 எதிராக —வழக்காளிகள்

1. சின்னத்துரை சின்னராசாவுக்கு மனைவி
2. செயமணி இருவரும் கோண்டாவில் வடக்கு —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9629ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஹூ ஆனி மாதம் 1-ம் திகதி (1—6—70) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் என்னுல் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 2325/- இதில் ரூபா 1500/-க்கு 13-12-67 தொடக்கம் 8-10-68 வரையும் 10% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் இதில ரூபா 700/- குறைக்கப்பட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவில் கோவில்கே விற்பற்று இணுவில் இறை "நொச்சிஒல்லை குமார தோட்டம்" என்னும் காணி நிலப்பரப்பு 2¼ செய்யவிர் வகையும். பனை மாமும், வடமேற்கு மூலையாக கிணற்றும் இந்த நிலப்பரப்பு 2¼ இன் எல்லை கிழக்கு கோண்டாவில் கிராமத்து எல்லை தற்போது ஒழுங்கையும், காலஞ்சென்ற நாகலிங்கம் பெண் செல்லம்மாவின் உருமைக்காரரின் ஆதனம். வடக்கு: மேலே சொல்லப்பட்ட செல்லம்மாவின் உருமைக்காரரின் ஆதனமும் சரவணமுத்து செல்வரெத்தினம் பரமேஸ்வரியின் ஆதனம். மேற்கு அப்புத்துரை சின்னத்தங்கச்சியின் ஆதனம். தெற்கு கனிக்கர் சங்கரப்பிள்ளையும் பெண் செல்லம்மாவின் ஆதனம்.

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
9-4-70 (எம் 22, 24-4-70)


# THAMBY & Co.

ACCEPT

**I. Fixed Deposits**

at the following **Rates of Interest**

**1. Year 9 % per annum**

FOR CHARITABLE INSTITUTIONS

12 % per annum

INTEREST IS PAYABLE ANNUALLY

N. B. These Deposits could be Withdrawn At Any Time by Giving the Firm 30 DAYS WRITTEN NOTICE

**II. Call Deposits**

THESE DEPOSITS COULD BE WITHDRAWN by giving the FIRM

30 Days Notice — Interest @ 8 % per annum
or 7 ,, ,, — ,, 7 % ,,

**III. Savings Deposits**

at the following RATES OF INTEREST

6 % per annum on MONTHLY MINIMUM BALANCES

10 % { ,, ,, ,, ,, FOR CHARITABLE INSTITUTIONS

*Head Office*: THIRUNELVELY, **JAFFNA**
*Branch* ,, : VANNARPONNAI, **JAFFNA**


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சுண்டுக்குளி இராமலிங்கம் செல்வராசா — வழக்காளி

வழ- இல. M. B. 8093 எதிராக

நல்லூர் 1. இரத்தினசபாபதி செல்வரட்ணமும் பெண்
2. முத்துமணியும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8093-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஹூ சித்திரை மீ 27-ம் திகதி (27-4-70) திங்கட்கிழமை காலை 11-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபாய் 3915/- ம் 30-3-66 தொடக்கம் 13-6-67 வரைக்கும் ரூபாய் 3000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 321-55 சதமும்

ஆதன விபரம்

வடமாகணம் யாழ்ப்பாண டிஸ்கிறிக் பூனகரியன் பகுதி பூநகரி கோயிற்பற்று மறவகுறிச்சி "தீவுவெளித்தரசு" 10 ஏக்கர் 2 றூட் 2பேர்ச் எல்லை கிழக்கு கந்தப்பர் சின்னத்தம்பிக்கும், கந்தர் செல்லையாவுக்கும் உரிய ஆதனம் வடக்கு நாகப்பர் மாணிக்கத்துக்குரிய ஆதனம். மேற்கு வாய்க்கால் தெற்கு முடிக்குரிய நிலம் பதிவு இலக்கம் C 35/137

16 A அம்மன்றேட் அ. ஜெகநாதன்.
கந்தர்மடம், யாழ்ப்பாணம். கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.
எம். 19 24—4—

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 9803

1. வேலுப்பிள்ளை சிவராமலிங்கமும்
2. பெண் மங்களேஸ்வரி இருவரும் திருநெல்வேலி கிழக்கு

எதிராக — வழக்காளிகள்

1. செல்லர் இராசதுரையும்
2. பெண் தெய்வானை — இருவரும் நல்லூர் யாழ்ப்பாணம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9803-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970-ஆம் ஹூ வைகாசி மாதம் 16-ஆம் திகதி (16-5-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1,890/— 8-3-68 தொடக்கம் 28-8-68 வரைக்கும் ரூபா 1,000 க்கு 12 வீதவட்டியும் அதற்குப் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச செலவு ரூபா 244/25 சதம்.

ஆதன விபரம

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று, கோப்பாய்தெற்கிறை 'விளுசி அடைப்பு" இதன் பரப்பு லாச்சம் 12¼ ம பயிர் வகைகளும் கிணறும் கல்வீடும் எல்லை கிழக்கு கந்தையா காசிவிங்கத்திற்கும் மறுபேயர்களுக்குமுரிய வாதனம், வடக்கு சிதம்பரத்தின் உரிமையாளர்களின் ஆதனம், மேற்கு வயித்தியர் சின்னப்பாவின் ஆதனம், தெற்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் ஆதனமும் ஒழுங்கையும், இதிலிருந்து பிரிக்கப்படாத நிலப்பரப்பு லாசசம் இரண்டும் (2) அதற்குள் சேர்ந்தவைகளும் மேற்குப் பக்கமாய் இருக்கும் கல்வீடும் முழுவதும். K. 206/73

22. ஆஸ்பத்திரி வீதி, வே. கோபாலபிள்ளை
யாழ்ப்பாணம். கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
16—3—70 எம் 14 24—4—70.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காங்கேசன்துறை 1. சின்னையா இராசையாவும் பெண்
2. பத்மாவதி —வழக்காளிகள்

இல M B 10416 எதிராக

காங்கேசன்துறை 1. அம்பலவாணர் பொன்னுத்துரையும் பெண்
2. செல்லம்மா — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 10416-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1970- ஆம் ஹூ வைகாசி மாதம் 30-ம் திகதி (30-5-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 11 500/—ம் 6-11-68 தொடக்கம் 15-7-69 வரைக்கும் ரூபாய் 9000/— க்கு 9 வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 548-16

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பளைக் கோயிற்பற்று வீமன்காமம் இறை "இடந்தறை" பர. நில. இலா. 21. இதில் R. C. லோறன்ஸ் உலாந்தாவால் இல. 299 தேதி 9-5-65 ல் அமைக்கப்பட்டுள்ள படத்தில் பர. நில இலா 5, குளி 13.7 அடங்கிய காணி பங்காளருக்குள் 4 ம் துண்டாகக்கப்பட்டிருக்கிறது, இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு அப்பாப்பிள்ளை பெண் ஆச்சிப்பிள்ளைக்கும் அம்பலவாணர் தம்பிப்பிள்ளை பங்காளருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு தார்வையும் கிணறும் தெற்கு இககாணிக்கும் மிகுதிக் காணிகளன் பாவிப்புககுமாக வழக்காளியால் ஒதுக்கப்பட்டுள்ள 9 அடி அகல ஒழுங்கை. இதடங்கலும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் இக காணிக்குரிய 1/4 பங்கு ஆடுகால் துலா தூர்வை நார்வையில் நிற்கும் தென்னமரகங்ளுடன்,

20, பெருமாள்கோவில் நா. ஸ்ரீஇரங்கநாதன்
வடக்கு ஒழுங்கை. கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்,
யாழ்ப்பாணம், 4-4-70 எம், 25 24-4-70

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B, 10200

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி. வேலுப்பிள்ளை சேதுநாதன் —வழக்காளி

எதிராக

மூளாய்,

1. சுப்பிரமணியம் தர்மலிங்கமும்
2. பெண் முத்துப்பிள்ளையும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10200-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1970-ம் ஆண்டு வைகாசி மீ 27-ந் திகதி (27-5-70) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 9082/-ம, 6-8-68 தொடக்கம் 19-5-69 வரைக்கும் ரூபா 7000/-க்கு 7 வீத வட்டியும், அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்றாக இறுமடும் வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 697-30 சதமும் செலவில் ரூபா 175/- கட்டப்பட்டுள்ளது.

ஆதனங்களின் விபரம்

1, வடமாகாணம் யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கிறை "கலக்கலாசிட்டி" நிலப்பரப்பு 6 குளி 8 இதனும் செய்பயிர்வாண்பயிரும். எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் இரத்தினத்தின் ஆதனம், வடக்கு நாகமுத்து கைம்பெண் சரசுவின் ஆதனமும். நாகமுத்து பெண் நாகம்மாவின ஆதனமும மேற்கு ஒழுங்கை, தெற்கு றோட்டு, மற்றப்பங்காளருக்குரிய கிணற்றுப் பங்குகளும வழி வாய்க்காலும தவிர இதடங்கலும்.

E. 375/90 ல் பதியப்பட்டது

2. ஷை வட்டுக்கோட்டை கிழக்கிறை "நெடுங்கேணி" நிலப்பரப்பு 6 குளி 10 தென்கிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் 1/3 பங்கும். எல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் நாகம்மாவின் ஆதனம். வடக்கு சிற்றம்பலம் பெண் சின்னத்தங்கத்துக்கும் வேலுப்பிள்ளை பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு வாய்க்கால். தெற்கு சண்முகம் நவரத்தினத்தின் உரிமையாளரின் ஆதனம். இதடங்கலும். E. 375/91ல் பதியப்பட்டது.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர், விலை மதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரர்
மல்லாகம், 4-4-70
எம் 13 10—4—70

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 9237

சாமகுரு சற்குரு பண்ணாகம் தெற்கு சங்கானை மேற்கு — வழக்காளி.

எதிராக

ஆழ்வான் நாகமுத்து பல்லசிட்டி சங்கானை மேற்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M. B. 9237-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும ஒருதுண்டுக்காணியை 1970-ஆம் ஆண்டு மே மீ (வைகாசி) 4-ந் திகதி (4-5-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 930/- 13-7-67-ஆம் திகதி தொடக்கம் 21-12-67 வரை ரூபா 650/- க்கு 12 வீத வட்டியும பின் முழுத் தொகையும் இறுபடும்வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 300-55 இதில் ரூபா 266/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்கு சங்கானைகோவிற்பற்று சங்கானை மேற்கு 'பஜலசிட்டி' பரப்பு நிலவரச்சம் 1ம் குழி 7½ வீடும் வாண்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு சின்னவன் முருகனுக்கும் பெண் பாறிக்கும் உரிய ஆதனம். வடககு கை ஒழுங்கையும் மேற்கு சின்னவன் கணவதியின் ஆதனம். தெற்கு ஆழ்வான் நாகமுத்துவுக்குரிய ஆதனம், வடக்கு கை ஒழுங்கையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உருத்தும்.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
'விதானை வளவு'
சித்தன்கேணி. 5-3-70.
M. 17 24-4-70

---

## Commission Sale
### கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ, இல. 10246

1. புலோலி மேற்கு கணபதிப்பிள்ளை இராமலிங்கத்தின் மரண சாதனத் தத்துவக்காரன் புலோலி மேற்கு தியாகராசா விஜயரத்தினம் —வழக்காளி

எதிராக

1. சபாபதிப்பிள்ளை காசிநாதர்
2. பெண் மாணிக்கம்மா இருவரும் அல்வாய் வடக்கு அல்வாய் —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்தகோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்களை 1970ம் ஆண்டு மே மாதம் 25-ம் திகதி (25-5-1970) திங்கட்கிழமை] முற்பகல் 9-30 மணிதொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று (1.) அல்வாய் மாப்பாணக்குறிச்சியிறை கிணற்றும் பார்திதெணி நி. பா. 26¾ ஷை தோட்டம 1 இந்தப் பிரிவுகளில் கிழக்குப் புறமாக மூன்றிலிரண்டு பங்கில் அரைவாசியில் வடக்குப் புறமாக இரண்டரைப் பரப்புக் கழித்து மிகுதிக்கு பரப்பு 6 குளி 15½ பனைகள், வடலிகள், கிணறுகளும் எல்லை கிழக்கு: தெரு, வடக்கு: சரவணமுத்து பெண் வள்ளிப்பிள்ளைக்கும மதுபேருக்குமுடையவாதனம், தெற்குப் பின்னுள் காணும் 2-ம் ஆதனம், இவ்வெல்லைக்குள் நிலத்தில் சொரியலாய் நாலில் ஒரு பங்கும், பழைய கிணறுகள் இரண்டிலும், மனைகள், வடலிகளிலும் இதற்குரிய பங்கும், புதிதாக வெட்டுவித்த கிணற்றில் சொரியலாய் நாலில் ஒரு பங்கும.

(மதிப்பிட்ட விலை ரூபா 3,000/-)

2. அல்வாய் நீலகுட்டியார் குறிச்சியிறை என்ளுக்கொண்டான் நி. பா. 10, 5/8 ஷை தோட்டம 3, பனைகள், வீடுகள், கிணறும் எல்லை கிழக்கு தெரு, வடக்கு இராமலிங்கம் சரவணமுத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம், மேற்கும, தெற்கும சுப்பிரமணியம் பெண் தங்கமுத்துவுக்கும் மதுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குள் வீடு, கொட்டில்கள் சொந்தமாகவும் மற்றைய யாவிலும் சொரியலாய் நிலப்பரப்பு மூன்றையும் (மதிப்பிட்ட விலை ரூபா 6,125/-)

| | |
|---|---|
| 1. தீர்வைத்தொகை: வட்டியும் முதலும் 27-10-68ல் ரூபா 300/- கழித்து | ரூ. 2820-00 |
| 2 வட்டி ரூபா 1600/-க்கு 10 வீதப்படி 27-10-68 தொடக்கம் 27-9-69 வரை | 146-66 |
| 3. (1 & 2) தொகை | 2966-66 |
| 4. வட்டி ரூபா 2,966/-க்கு 5 வீதப்படி 27-9-69 தொடக்கம் 27-5-70 வரை | 222-50 |
| 5. செலவு தொகை முத்திரைச் செலவுடன | 134-00 |
| | 3323-16 |

சிவலிங்கநிலையம்,
வி எம். ரோட்
பருத்தித்துறை 18-4-70

க. நல்லலிங்கம்
ஏலவிற்பனையாளர் & விலைமதிப்பாளர்
எம். 25 24-4-70

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னம்பலம் வைரமுத்து, உடுவில் —வழக்காளி

வழ: M. B. 7956 எதிராக

1. வைரவன் கணபதியும் 2. பெண் பாறி
இருவரின் விலாசம் உடுவில். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7956ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970ம் ஆண்டு வைகாசி மீ 30-ம் திகதி (30-5-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5666-66ம் 29-1-66 தொடக்கம் 6-12-66 வரைக்கும் ரூபாய் 4000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 353-95 இதில் ரூபாய் 3565/- கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸதிறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவில்கோவிற்பற்று உடுவில் இறை "அம புலியபுலம்" நி. பா.20 ஆறுன் உளவுப்படி நி ப. 21, இதில்தெற்குப் பக்கமாக நில. பா. 8 இதற்கு எல்லை கிழக்கு தம்பு சுப்பிரமணியத்திற்கும் பெண் இரத்தினத்திற்குமுரிய ஆதனம், வடக்கு பொன்னம்பலம் வைரமுத்துவினுதனம், மேற்கு சின்னத்தம்பி கனகரத்தினத்தினுதனம். தெற்கு கதிரவேலு பெண் தங்கம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் இதன் மிகுதி ஆதனத்திலிருக்கும் கிணற்றில் தினமும முற்கல் தண்ணீர் இறைப்புருத்தும குறித்த கிணற்றில் கிழக்கோரமாக வாய்க்காலின் வழி உரித்தும், குறித்த கிணற்றிலிருந்து பிரதான ஒழுங்கைக்குப் போகும வழி உரித்தும்.

பதிவு இலக்கம்: H 344/15

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம், 4-4-70

அ, போ. எதிர்மனசிங்கி,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
M 23 24-4-70

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கு,
கந்தம்பிள்ளை கைம்பெண் அன்னப்பிள்ளை —வழக்காளி

வழ: இல M. B. 10774 எதிராக

கோப்பாய் தெற்கு, செல்லத்துரை நல்லையா கைம்பெண் கமலாம்பிகை தனக்காகவும் காலஞ்சென்ற செல்லத்துரை நல்லையாவின் தத்துவத்துக்கு சட்டப்படி பிரதிநிதியும் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B 10774-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஆண்டு வைகாசி மீ 23-ம் திகதி (23-5-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3500/- இதில் ரூபா 3000/-க்கு 23 4-69 தொடக்கம் 14-10-69 வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 331-16 செலவழித்த செலவு ரூபா 244-07 வெலியாத்துச் செலவு ரூபா 49-87 எதிர்வரும் செலவு ரூபா 37-82

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கிறை "பதிராயன் புலம்" பா. நில 2ம் (இரண்டு) எல்லை கிழக்கு வழி இறை வாய்க்காலுக்கு விடப்பட்ட நிலம். வடக்கு சுப்பிரமணியம் கோபால் பெண் வள்ளியம்மையினுதனம். மேற்கு றோட், தெற்கு தர்மலிங்கம் பெண் தங்கம்மாவினுதனம். இதடங்கலும் இக் காணிக்கு தெற்கெல்லையில் இருக்கும் காணியின் தெற்குப் பக்கமாக அருகிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் இக் காணியின் தெற்கெல்லைக் காணியின் தெற்கெல்லையிலிருந்து கிழககுப் பக்கமாக வழிப்பாவிப்புரித்தும்

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
15-3-76

க. சுப்பிரமணியம்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
எம். 15 24-4-70

---

## COMMISSION SALE
### கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 9930

1. சபாரெட்டினம் சிவப்பிரகாசம், புலோலி மேற்கு, பருத்தித்துறை —வழக்காளி

எதிராக

1. சுந்தரக் குருக்கள் சோமசுந்தரக் குருக்கள்
2. பெண் மதனகாமேஸ்வரி அம்மாள், அல்வாய் வடக்கு

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைதத கொம்மிஷன் அதிகாரப் படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமொதனங்களை 1970ம் ஆண்டு யூன் மாதம் 8-ந் திகதி (8-6-70) திங்கட்கிழமை முற்பகல் 9 30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து என்னால் பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று (2) கோப்பாய் தெற்கிறை காஞ்சபிரயன் நில: 36½ இதற் கூடாக கிழக்கு மேற்காகச செல்லுகின்ற றோட்டுத் தெரு வடக்குப் பக்கமாக நி. பா: 26 குளி 7 இதில் கிழக்குப் புறமாக நி. ப 7 நீக்கி மேற்குப் புறமாக நி. பா 19 குளி 7, எல்லை கிழக்கு மேல் நீக்கப்பட்ட பாகம், வடக்கு ஷைக்குரிய நிலம், மேற்கு அப்புத்துரை பெண் செல்வரெத்தினம் உரிமைக்காரருக்குவுரிய வாதனம், தெற்கு றோட்டு, இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும் (மதிப்பிட்ட விலை ரூபா 24,430)

2. ஷை மாகாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மாப்பாண குறிச்சியிறை கிளவியார் மணல் நி. பா 18, 3/8 இதில் மேற்குப் புறமாக மூன்றில் இரண்டு பங்கும், கிளவியார்மணல் நி. பா 5ம் கிளவியார்மணல் நி. பா 5½ கூடிய நி. ப. 22¾ இதில் நி. ப. 18 குளி ¾ ல் ஊடான கையொழுங்கைக்கு தெற்குப் புறமாகவுள்ள நிலத்தில் ஏறகுறைய நி. ப. 3 இதில் மேற்குப் புறமாக ஐந்தில் நாலு பங்குக்கு நி. ப. 2 குளி 7, 1/5 தென்னைகள், கல்வீடு கிணறு மடப்பளி, சவுக்கண்டியும்; எல்லை கிழக்கும் மேற்கும் சிதம்பரக் குருக்கள் சுப்பிரமணிய ஐயருக்கும் மறுபேருக்குமுடையவாதனம் வடக்கு கைஒழுங்கை. தெற்கு சுப்பிரமணியஐயர் பெண் மனோன்மணிக்குரிய வாதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம். தென்னைகள், கிணற்றில் சொரியலாய் அரை வாசியும் கல் வீட்டில் கிழக்கறையும் மடப்பளி சவுக்கண்டி நிந்தமாகவும் வடக்குப் புறமாக புதிதாகக் கட்டுவித்த கல்வீட்டில் மேற்கரைவாசி நிந்தமாகவும். (மதிப்பிட்ட விலை ரூபா 4000/-

| | |
|---|---|
| தீர்வைத்தொகை — — ரூபா | 8515 00 |
| வட்டி ரூபா 8046/-க்கு 8 வீதப்படி 30-1-68 தொடக்கம் 29-7-68 வரை | 321 84 |
| வட்டி ரூபா 8836/-க்கு 5வீதப்படி 30-7-68 தொடக்கம் 30-3-70 வரை | 687 58 |
| செலவு தொகை ரூபா 310-90ல் ரூபா 150/- கழித்து | 160 90 |
| மொத்தம் ரூபா | 9685 32 |

'சிவலிங்க வாசம்''
வி. எம். றோட்,
பருத்தித்துறை

க. நல்லலிங்கம்
ஏலவிற்பனவாளர் & விலைமதிப்பாளர்
எம். 24, 24-4-70

---

"கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனின்"

சைவ சமயப் பணிகள் பல புரிந்த

## திரு. வே. த. செல்வத்துரை அவர்கள்



இந்த நாட்டின் சிறந்த விவேகிகளான மாணவர்கள் கல்விகற்க வாய்ப்பளிக்கும் பல்கலைக் கழகத்துக்கு — பேராதனைக்குக் கற்கச் சென்ற பிள்ளைகள் - சைவப் பிள்ளைகளின் வழிபாட்டுக்குச் சைவ ஆலயம ஒன்று பல்கலைக்கழக வளவில் இல்லாத பெருங்குறை நீண்ட நாட்டுளாகவே இருந்து வந்தது. இப் பெருங்குறையை நீக்குதற்குப் பல்கலைக் கழக இந்துமாணவர் சங்கம் பெரு முயற்சி செய்தது. இந்து மாணவர் சங்கத்தின் பெரு முயற்சியால் குன்றுதோறுடும் குமரப் பெருமானுக்கு ஆலயம் நிருமாணிக்கப்பட்டது. இந்த நன்முயற்சி நிறைவேற ஊக்கம் அளித்தவர்களில் ஒருவரே கண்டி மராமத்திலாகா ஓவசியரும், அகில இலங்கை ஓவசியர் சங்கத் தலைவருமான திரு. வே. த. செல்வத்துரை அவர்கள்,

திரு. செல்வத்துரை அவர்கள் கண்டி சைவமகாசபையின் செயலாளராயும், உப தலைவர்களில் ஒருவராயும் இருந்து ஆற்றிய சைவத் தமிழ்த் தொண்டுகள் பிரசித்தமானவை. சைவ தமிழ்த் தொண்டின் வழியில் தம்மையே அர்ப்பணித்த திரு. செல்வத்துரை அவர்கள் மிகவும் சிறந்த தொழிற் சங்கவாதியாகவும் திகழ்ந்தார்.

உயர்ந்த சேவையையே தமது உன்னத இலட்சியமாய்க் கொண்ட ஓவசியர் திரு வே. த. செல்வத்துரை அவர்கள் தமது ஐம்பத்திரண்டாம் வயதில் இவ்வுலக நீத்துச் சென்றமை சைவ தமிழ் உலகுக்கு ஈடுசெய்ய முடியாததொரு பெரு நஷ்டமேயாம்.

திரு செல்வத்துரைஅவர்களது
தவமே தவம்.
"தவமுந் தவமுடையார்க்கும்"

— அ. அமிர்தலிங்கம் பீ. ஏ.
உரும்பிராய்.

## எனது தென்னிந்தியா யாத்திரை

— ஒரு காரைநகர் மாணவி —

நானும் எனது பெற்றோரும் சகோதரர்களுமாக அண்மையில் தென்னிந்திய யாத்திரைக்குச் புறப்பட்டு தலைமன்னார்த் துறைமுகத்தை அடைந்தோம சோதனைகள் முடிந்த பின் கப்பலில் ஏறினோம். எல்லா பிரயாணிகளும் வந்து சேர்ந்தபின் கப்பல புறப்பட்டது, கப்பல்கரையை அடையும்போது இராமேஸ்வரக் கோபுரம தென்பட்டது, அதைக் கண்டு மகிழ்வுற்றோம் அங்குள்ள ஒருகடையில் உணவருந்தி விட்டு இராமேஸ்வரப் பெருமானை வழிபட்டுக்கொண்டு மதுரைக்குச் சென்றோம். புகையிரதம மதுரை அடைந்தபின் அங்குள்ள ராணிமங்கம்மாள் சத்திரத்தில தங்குவதற்காகச் சென்றோம் அங்குள்ள மனேஜர் எங்கிருந்து வருகிறீர்களென விஞவினர். நாங்கள் இலங்கையில் இருந்து வருவதாகக் கூறினோம்.

பஸ் திருச்சினுப்பள்ளியை அடைந்ததும் இறங்கி உடுப்பி லாட்ஜ் என்னும விடுதியில் தங்குவதற்காகச் சென்றோம. கொண்டு சென்ற பொருட்களை அங்கு வைதது விட்டு திருச்சிவங்கிக்குச்சென்றோம் அங்கு காசை எடுத்துக் கொண்டு காவிரி ஆற்றுக்குக் குளிப்பதற்காகச் சென்றோம். அங்கு குளித்து விட்டு ஸ்ரீரங்கம என்னும் கோவிலுக்குச் சென்றோம். சுவாமியை வணங்கி அருச்சனை செய்து கொண்டு வந்து கோவிலைச் சுற்றிப் பார்த்தோம். கோபுரங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து விட்டு வந்தோம் பின் சிதம்பரத்துக்குச் செல்வதற்காக புகை வண்டியில் ஏறிச் சென்றோம புகையிரதம் சிதமபரத்தை அடைந்ததும் இறங்கி சிவபுரி மடத்தில் தங்குவதற்காகச் சென்றோம். அங்குச் சிதம்பரம் கோவிலைப் பார்க்கச் சென்றோம் கோவிலைப் பார்த்துவிட்டு வந்து நாவலர் பாடசாலைக்குச் சென்றோம். அங்கே சித்தாந்த வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பார்க்கச் சென்றோம் பின்பு சீர்காழிக்குச் சென்றோம். அங்குள்ள குருக்கள் கோவில் வரலாற்றினை விளக்கப்படுத்தினர் வைத்தீஸ்வரன் கோவிலுக்குச்சென்றோம் அந்தக் கோவிலையும் தரிசித்தபின்பு திருப்புன்கூருக்குச் சென்றோம். பி. ப ½ மணியானதும் பூசகர் வந்து கோவிலைத் திறந்து அருச்சனை செய்தார் அங்கும் ஒரு காட்சி கண்டு மகிழ்ந்தோம். நந்தனுரைக் கோவிலுக்குள் விடவில்லை. சுவாமியைப் பார்க்க முடியாது நந்தி மறைத்துக் கொண்டிருந்தது அதைக்கண்ட அவர் "சற்றே விலகியி நம் பிள்ளாய்" என்ற பாடலைப் பாடினர். உடனே நந்தி விலகியது நந்தனுருக்காக நந்தி விலகியுள்ளது. இதையும் பார்த்து விட்டு சிதம்பரம் சென்றோம். அங்கிருந்து மதுரைக்குச் செல்ல வேண்டியதாகையால் புகையிரத நிலையத்துக்குச் சென்றோம். புகையிரதத்தில் ஏறி மதுரையை வந்தடைந்தோம். மதுரையில் திருப்பரங்குன்றம் என்னும் கோவிலையும் தரிசித்தோம் பின் மதுரையிலிருந்து புகையிரதத்தில் ஏறி இராமேஸ்வரத்துக்கு வந்தோம். இராமேஸ்வரத்தில் இறங்கி 'மீனுட்சி லாட்ஜ்' என்னும் விடுதியில் தங்குவதற்காகச் சென்றோம். அங்கு கொண்டு சென்ற பொருட்களை வைத்துவிட்டு இராமேஸ்வரப்பெருமானைத் தரிசிப்பதற்குச் சென்றோம். அங்கு 22 தீர்த்தங்களில் நீராடி சுவாமியை வணங்கினோம் கப்பல் டிக்கற் எடுப்பதற்காக அங்குள்ள ஆபிசுக்குச் சென்று கப்பல் டிக்கற்றை எடுத்தோம. சுகமில்லாது இருந்தபடியால் பார்க்கவேண்டிய இடங்களைப் பார்க்காது திரும்பி வந்தோம். பின் தங்குமிடத்துக்கு வந்து வைத்த பொருட்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு எங்கள தாய்நாடு திரும்புவதற்காக இராமேஸ்வரம் துறைமுகத்துக்குச் சென்றோம. அங்கு பத்திரங்கள் நிரப்பித் தரும்படி தந்தார்கள் நிரப்பிக் கொடுத்தபின் நாங்கள் கொண்டு வந்த பொருட்களையும் சோதனை செய்தார்கள், அது முடிந்ததும் கப்பலால் இறங்கி தலைமன்னர் புகையிரத நிலையத்துக்குச் சென்றோம் அங்கு புகையிரதத்துக்கான அனுமதிச் சீட்டைப் பெற்றுக் கொண்டு புகையிரதத்தில் ஏறி அமர்ந்தோம். அது யாழ்ப்பாணத்தை அடைந்ததும் புகையிரதத்தால் இறங்கி வெளியில் வந்தோம். நாங்கள் இருக்கும் இடத்திற்குச் செல்வதற்கான பஸ் வண்டியும் நின்றது. அதில் ஏறி எங்கள் வீட்டுக்கு இன்பமாக வந்து சேர்ந்தோம்.

### மதுரையில் தம்பிரான் சுவாமிகள்

மதுரை மீனுட்சி அம்பாள் தேவஸ்தான சார்பில் மதுரை ஆதீனகர்த்தர் தலைமையில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளால் "கந்தாநுபூதி" விரிவுரை ஆரம்பிக்கப்பெற்றுள்ளது. 24-4-70 ல் ஆரம்பமான இவ்விரிவுரை தொடர்ந்துஒருமாசம் வரை நிகழும். 7-4-70 வரை தம்பிரான்சுவாமிகள் தாயகம் திரும்புவார்கள். (ந. நி)

### பாரிசில் மூன்ருவது உலகத் தமிழ் மாநாடு

சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கழகாதரவில் நடைபெறும் மூன்ருவது உலகத் தமிழ் மகாநாடு பாரிசில் ஜூலை மாதம் நடுப் பகுதியில் நடைபெறவிருக்கின்றது. நூற்றுக்கு மேற்பட்ட பல நாட்டுத் தமிழ் அறிஞர்கள் இம் மகாநாட்டில் கலந்துகொள்வார்கள் என முரசுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது. இம் மகாநாடு பற்றிய விபரங்கள் அடுத்த இதழில் வெளி வரும்.

— "லண்டன்முரசு" 14-4-70.

# தெய்வீக அழகநுபவம்

திரு. செ. வைத்தியலிங்கன், M. A., M. Litt
தமிழ் விரிவுரையாளர் (கலைத்துறை, அண்ணுமலைப் பல்கலைக்கழகம்

(முன்வளர்ச்சி —4)

பசுமையான குவளை மலர்களாலும் செந்தாமரை மலர்களாலும், அழகிய நீர்வாழ் பறவையினத்தாலும். பின்னிக்கிடக்கும் அரவங்களாலும், தங்கள் அழுக்கினைப் போக்கிக் கொள்கின்றவர் நாடியடைதலாலும் பொய்கை மடுவானது தெய்வப் பொலிவுடன் உள்ளது.

மெய்யன்பர்கள் அருச்சித்த குவளை மலர், செந்தாமரை மலர், கங்கை நீர், தலை, கொக்கிறகு ஆகியவற்றைக் கொண்டிலங்குதலாலும், மல நீக்கம் வேண்டுவோர் வந்து தன்னை அடைதலாலும் சிவனது காட்சியை நினைவிற்கு வருகிறது— ஒரு புறம.

குவளை மலர்போன்ற கண்களையும், செந்தாமரையனைய திருமுகம் திருக்கை திருவடிகளையும், கை, தோள் ஆகியவற்றில் வளையல் தொடி ஆகிய அணிகளையும், கூந்தலில் கொண்ட சடை நாகமாகிய அணியையும், கொண்டிருத்தலானும் மலநீக்கம் பெற அடியார்கள் தன்னிடம் அடைக்கலமாய் வருதலானும் உமையம்மையின் காட்சியே உளத்தில் நிறைகிறது மற்றொரு புறம்.

அன்றியும், குவளை மலரும் வளையல் முதலிய அணிகளும் விளங்குவதால் உமையம்மையையும், செந்தாமரை மலரையும் பின்னிக் கிடக்கும் பாம்பினையும் அணிந்திருத்தலால் சிவனையும், மனத்தாலும் வாக்காலும் செயலாலும் தேடிக் கொள்கின்ற அழுக்குகளையும் ஆணவம் கன்மம் மாயை ஆகிய அழுக்குகளையும் போக்கிக்கொள்ள மெய்யன்பர்கள் அவாவிச் சார்தலால் இருவரையும் ஒத்து விளங்குகின்ற பொய்கை என (அருத்தநாரீசுவரர் திருமேனியை) நினைப்பித்தல் சிந்தித்து இன்புறற்குரியது. ஆக, இவற்றையெல்லாம் தெய்வீக அழகநுபவத்துடன் எண்ணவும் பேரின்பப் பொய்கை மடுவில் திளைத்திடவும் பிறரை ஆவலோடு அழைக்கும் மணிவாசகர்,

"பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்
பின்னு மரவத்தால்
தங்கள் மலங்கழுவு
வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோ
னும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற்
புகப்பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு
கலந்தார்ப்பக
கொங்கைகள் பொங்கக்
குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்
தாடேலோ ரெம்பாவாய்"

எனப்பாடி பாடி மகிழ்கின்றார்.

இறையின்பத்தினை இயற்கைப் பொருளாகவே கண்டு காட்டும் குமரகுருபர சுவாமிகள் திறத்தினை அவர் அருளிய பிரபந்தங்களில் ஆங்காங்கே காணலாம். சகல கலாவல்லி மாலையில் கல்விப் பெருஞ் செல்வப் பேறும் கலைமகளைச் 'சுவைகொள் கரும்பே'என்றும், 'கவிமழை சிந்தக்கண்டு, களிக்கும கலாப மயிலே' என்றும், 'தொண்டர் செந்நாவினின்று காக்குங் கருணைக் கடலே' என்றும், 'தொண்டர் தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும் வண்ணம் காட்டும் வெள்ளோதிமப்பேடே' என்றும் அழைக்கும் பாங்கினுடே குமரகுருபரர் கொண்ட இயற்கையிறையின்பம் காண்க.

(வளரும்) எம் 11, 10, 24-4-70


### கோட்டு விற்பனவு விளம்பரம

எலிசபெத் இரத்தினம் மரியாம்பிள்ளையும், கணவன் இன்னுச்சிப் பிள்ளை No 16 கோவில் வீதி, யாழ்ப்பாணம்
இல: M B. 8920 எதிராக —வழக்காளிகள்
ஆசீர்வாதம் அந்தோனிப்பிள்ளை (காலஞ்சென்றவர்) பெண் மரியம்மா தனக்காக காலஞ்சென்ற கணவன் ஆ. அந்தோனிப்பிள்ளையின் சட்டபூர்வப் பிரதியாகவும் 58, கோவில் வீதி. யாழ்ப்பாணம் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8920ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுள் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஆு ஆனி மீ 3-ந் திகதி (3-6-70) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ருபா 1280/- இதில் ருபா 1000/-க்கு 8—3—67 தொடக்கம் 14—12—68 வரை 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் 5% வட்டியும் கோட்டுச்செலவு ருபா 360 - 39 சதம் செலவு கணக்கால் ருபா 300/- கொடுபட்டது தீர்வைத் தொகையில் ருபா 500/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை பறக்கு காடு மலந்தறையும் ஆலடித் தறையும் நிலப்பரப்பு 2 எல்லை கிழக்கு மனுவேல்பிள்ளை சந்தியாப்பிள்ளையின் ஆதனம் வடக்கு ஒழுங்கை, மேற்கு ஈடு கொடுத்தவரின் ஆதனம். தெற்கு சவிமுத்து நீக்கிலாப்பிள்ளையினதும் பங்காளரினதும் ஆதனம். இதடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
சித்தங்கேணி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
22-4-70. எம். 29, 24-4-70 வெந்நீஸ் மேஸ்தரும்

### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம

அரசாங்க உத்தரவுடன் வலந்தலை காரைநகர் வடக்கில் அடைவு பிடிக்கும் வை சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1968ம் ஆு சித்திரை மீ 1-ம் திகதி தொடக்கம் 1969 ம் ஆு பங்குனி மீ 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும நகைகள் யாவும் என்னுல் 1970-ம் ஆு வைகாசிமீ 23ம்திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் ஷை அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்; 1970 ஆு சித்திரைமீ 7-ந் திகதி
வை. ஏரம்பமூர்த்தி
ஏலவிற்பனையாளர்